Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஐப்பசி 10    (26-10-1992)    திங்கட்கிழமை    ஓசை 251

## கிழக்கிற்கு மாற்றலாகிய கிராமசேவகர்கள் பதவி துறப்பு

தென்பகுதியிலிருந்து கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட பல கிராம சேவை அதிகாரிகள் பதவி விலகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தத்தம் சீருடைகள் மற்றும் ஆவணங்களை அதிகாரிகளிடம் கையளித்து விட்டுப் பதவிவிலகியுள்ளனர். மாத்தளையைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள 219 கிராமசேவையாளர்களை மாத்தளை பொலிஸ் நிலையத்தில் ஆஜராகும்படி கடந்த வாரம் பணிக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் உடனடியாகக் கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். 49 பேர் மட்டும் இடமாற்ற உத்தரவை ஏற்று கிழக்கு மாகாணத்துக்குச் சென்றனர். ஏனை [4 ஆம் பக்கம் பார்க்க]

# ஓய்வுபெற்ற ராணுவத்தினர் மீண்டும் சேவைக்கு அழைப்பு

## ஆட்பற்றாக்குறையை சமாளிக்க அரசாங்கம் பகீரத முயற்சி

இராணுவத்தில் ஏற்பட்டுள்ள பெரும் ஆட்தட்டுப்பாட்டை அடுத்து ஓய்வு பெற்ற இராணுவத்தினரையும் சேவையில் இணைத்துக்கொள்ள கூட்டுப்படைகள் தலைமையலுவலகம் முடிவு செய்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா இராணுவத்தில் இருந்து தப்பியோடுவோர் தொகை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தும் பல ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளதையும், சேவைக்குத் திரும்ப முடியாத அளவில் காயப்பட்டுள்ளதையும்தொடர்ந்து பெரும் ஆள் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது.

இதுவரை சுமார் 8000க்கு மேற்பட்டோர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியுள்ளனர். இவ்வாறு தப்பியோடுவோர் தொகை மேலும் அதிகரித்த வண்ணமும் உள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் டென்சில் கொப்பேகடுவ உட்பட ஒன்பது உயர் அதிகாரிகள் கொல்லப்பட்ட பின்னர் இதன் அதிகரிப்புத் தெளிவாக தெரியத்தொடங்கியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் சுமார் 10,000 இராணுவத்தினர் இரண்டாவது ஈழப்போரில் கொல்லப்படடோ அன்றி காயமடைந்தோ யுத்தகளத்திற்குச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே சிறிலங்கா அரசாங்கம் இராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் தீவிரமுயற்சியில் ஈடுபட்டுள்ளது இதன் ஒரு கட்டமாக இராணுவத்தில் சேருவதற்கான கல்வித் தகைமைகளைக் குறைத்தது. (04ஆம் பக்கம் பார்க்க)

## கிராமத்தின் பெயர் மாற்றம் சிங்கள தினசரி கவலை

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் 1972ஆம் ஆண்டுமுதல் ''தேக்கவத்த'' என்ற பெயரில் செயற்பட்டு வந்தகிராமம் தற்போது ''சுந்தரலிங்கபுர'' எனப் பெயர்மாற்றப்பட்டிருப்பதாக சிங்களத் தினசரி ஒன்றுசெய்தி வெளியிட்டுள்ளது.

இதுபற்றி அப்பத்திரிகையில் மேலும்; இந்தகைய செயல்கள் மிகவும் வருந்தத்தக்கவை என்றும், இது சிங்கள மக்களைப் பெரிதும் பாதிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது அத்துடன் அரசாங்கம் இவ்விவகாரத்தில் உடன் தலையிட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது

இதேவேளை இந்த இடத்தின் புராதனப்பெயர் ''தேக்கங்காடு'' என்பது குறிப்பிடத்தக்கது.

## க. பொ. த. (சா/த) முன்னோடித் தேர்வு

க. பொ த முன்னோடித் தேர்வில் சங்கீதம் - நடனம் செயன்முறைத் தேர்வு நடத்து பிரதம - உதவிப் பரீட்சகர்கள் யாவருக்கும் நியமன கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எல்லாப் பிரதம உதவிப் பரீட்சகர்களும் 28-10-92 புதன்கிழமை அன்று மு. ப. 10.00மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்திற்குத் தவறாது சமுகம்தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

## இவ் ஆண்டு இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வாம்

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு இவ்வாண்டு இறுதிக்குள் நிரந்தர தீர்வொன்று காணப்படும் என பாராளுமன்ற தெரிவுக் குழுவின் உயர் தலைமைப் பீடம் நம்பிக்கை தெரிவித்திருப்பதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்க தெரிவித்த யோசனைகளை கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் நிராகரித்துவிட்டதால் புதிய யோசனைகள் தெரிவிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## 29பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

இருபத்தி ஒன்பது பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கி அவர்களை கிழக்கு மாகாண எல்லைப்புறங்களுக்கு அனுப்புவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இவர்களுக்கு துப்பாக்கி மற்றும் சுடுபடைக் கலங்களுக்கு துரித விசேட பயிற்சிக்கென திட்டமொன்றும் உடனடியாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பன்னிரண்டு பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிகளும் பதினொரு இன்ஸ்பெக்டர்களுக்கு பிரதம இன்ஸ்பெக்டர் பதவிகளும் உடனடி (04 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்டத்தில் பெருமளவு மக்கள் கைது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் 3ஆம்திகதி சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட ''அதிவேகத் தாக்குதல்'' நடவடிக்கையினைத் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் தங்கியிருந்த நூற்றுக்கணக்கான பொதுமக்களை தேசத்துரோகிகளுடன் இணைந்து இராணுவம் கைது செய்துள்ளது.

பெரிய கட்டைக்காடு, இலகடிப்பிட்டி, புதுக்கமம், முதலைக்குத்தி, காத்தான்குளம் ஆகிய பகுதிகளில் சிக்கியிருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த வியாழக்கிழமை மேற்படி பகுதிகளைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர்வயல்வேலைகளில் ஈடுபட்டிருந்தோர், வீடுகளில் தங்கியிருந்தோர்களை வயது வேறுபாடின்றி கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

மேற்படி பொதுமக்களைக் கைது செய்த இராணுவத்தினருக்கு புளொட், ரெலோ போன்ற தேசவிரோதிகளும் முகமூடி அணிந்தோரும் உதவி புரிந்ததாகத் தப்பிவந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

## கிழக்கிலிருந்து படை வாபஸ்; ஈ. பி. டி. பி. பொறுப்பேற்கும் - இரு மாதங்களில் நடக்குமாம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலிருந்து இன்னும் இரு மாதங்களில் சிறிலங்கா இராணுவம் விலக்கிக் கொள்ளவும், அந்தந்த

இருப்பதனாலும், தமக்கு எதிரானவர்களுக்கு அவர்கள் கஷ்டங்களைக் கொடுப்பதா

லும் தமது கட்சியினர் இராணுவத்துடன் ஒத்துழைத்து வருவதாகக் குறிப்பிட்டார்.

## தமிழீழ பொதுக்கல்விதேர்வு நாளை ஆரம்பம்

## 'விடுதலைப் புலிகள்' வெளிவந்துள்ளது

இம்மாத ''விடுதலைப் புலிகள்'' ஏடு வெளிவந்துள்ளது. ''சிறிலங்கா படைத்

இத்துடன் 'படை அமைப்பும் பதவி நிலைப்பட்டிகளும்' என்ற தலையங்கத்துடன் ஒரு

தொடர்ந்தும் பல ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளதையும், சேவைக்குத் திரும்ப முடியாத அளவில் காயப்பட்டுள்ளதையும்தொடர்ந்து பெரும் ஆள் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது.

இதுவரை சுமார் 8000க்கு மேற்பட்டோர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியுள்ள டென்சில் கொப்பேகடுவ உட்பட ஒன்பது உயர் அதிகாரிகள் கொல்லப்பட்ட பின்னர் இதன் அதிகரிப்புத் தெளிவாக தெரியத்தொடங்கியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் சுமார் 10,000 இராணுவத்தினர் இரண்டா...

...டுள்ளது.

இந்நிலையிலேயே சிறிலங்கா அரசாங்கம் இராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் தீவிரமுயற்சியில் ஈடுபட்டுள்ளது இதன் ஒரு கட்டமாக இராணுவத்தில் சேருவதற்கான கல்வித் தகைமைகளைக் குறைத்தது.

(04ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கிலிருந்து படை வாபஸ்; ஈ. பி. டி. பி. பொறுப்பேற்கும்

## - இரு மாதங்களில் நடக்குமாம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலிருந்து இன்னும் இரு மாதங்களில் சிறிலங்கா இராணுவம் விலக்கிக் கொள்ளவும், அந்தந்த இடங்களில் தமது அமைப்பினர் நிறுத்தப்படுவது தொடர்பாக அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகிறது எனவும் ஈ. பி. டி. பி பேச்சாளர் ரமேஷ் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் கிழக்கில் அதிகரித்து இருப்பதனாலும், தமக்கு எதிரானவர்களுக்கு அவர்கள் கஷ்டங்களைக் கொடுப்பதாலும் தமது கட்சியினர் இராணுவத்துடன் ஒத்துழைத்து வருவதாகக் குறிப்பிட்டார்.

## 125 தமிழ் இளைஞர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் அண்மைக் காலத்தில் மட்டும் சுமார் 125 தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் இவர்களில் பெரும்பான்மையானோர் யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிசார் கூறியுள்ளனர்.

இவர்களில் அநேகர் விடுதிகளில் தங்கியிருந்தவர்கள் எனவும் தெரியவருகிறது.

## வெளிநாட்டுப் பயண லீவு விண்ணப்பங்கள் அனுப்புக

(நல்லூர்)

இலங்கைக்கு வெளியே செல்வதற்கான விடுமுறை விண்ணப்பங்களை காலதாமதம் செய்யாமல் விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் விடுமுறை தொடங்குவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் கிடைக்கக்கூடியதாக தமக்கு அனுப்பி வைக்குமாறு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம். ஏ. சி. மொகைதீன் அவர்கள் கடிதமூலம் தெரிவித்துள்ளார்

மேற்கூறிய நிபந்தனைக்குட்படாது அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுவதுடன் மேற்கூறியவிண்ணப்பதாரிகள் விடுமுறையில் செல்லமுடியாத நிலை ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கல்விவளர்ச்சி வங்கி நிறுவ தீவிர முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களது நலன் கருதி ''கல்வி வளர்ச்சிவங்கி'' ஒன்று உருவாக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வங்கி மாணவர்களது பொருளாதார நலன்கருதிஉருவாக்கப்படவுள்ளதுபட்டப்படிப்பைமேற்கொள்ளும்மாணவர்கள்தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு இவ் வங்கியைப் பயன்படுத்தலாம். பட்டப்படிப்புக் காலத்தில் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளிற்கு தீர்வு காணுவதற்கு இவ் வங்கியில் இருந்து கடன் வசதிகளைப்பெற்றுக்கொள்ள முடியும் அதேபோல சேமிப்புக் கணக்குகளையும் இவ் வங்கிகளில் ஆரம்பிக்கமுடியும்.

மேற்படி கல்விவளர்ச்சி வங்கியை ஆரம்பிப்பதற்கு துரித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இரண்டாம் ஆண்டு வெளிவாரி மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய இப்பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு இணைப்பாளர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை இவ் விபரங்களை தெரிவித்தார்.

## வவுனியா நகரில் 'கறுப்பு வெள்ளி' இல்லை

(வவுனியா)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பின் ''கறுப்பு வெள்ளி'' அறிவிப்பை வவுனியா நகர்த் தமிழ் மக்கள் அனுஷ்டிப்பதற்கு மறுத்தனர்.

வவுனியா நகரில் கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமிழ் மக்களின் கடைகள் மற்றும் வர்த்தக ஸ்தாபனங்கள் யாவும் திறந்து செயல்பட்டதை அறிய முடிந்தது.

முஸ்லிம் கும்பல்களினால் சகல கடைகளும் மூடப்பட வேண்டும், கறுப்புக்கொடிகள் கட்டப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் தமிழ் மக்கள் எதுவித மாறுதல்களும் வெளிப்படுத்தவில்லை.

இதேவேளை, சிங்கள கடைகள், மற்றும் வர்த்தக ஸ்தாபனங்கள் யாவும் வழமை போல் செயல்பட்டதாக அறிய முடிந்தது. [தி]

## தாண்டிக்குளம் வரை புகையிரதச் சீட்டு பெறவேண்டும்

(வவுனியா)

கொழும்பிலிருந்து வடபகுதி செல்லும் பயணிகள் இனிமேல் தாண்டிக்குளம் வரை பயணச் சீட்டுக்களைப் பெறவேண்டும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுவரை பயணிகள் வவுனியா பயணச் சீட்டிலேயே தாண்டிக்குளம்வரை வந்தது குறிப்பிடத்தக்கது. தாண்டிக்குளம்வரையிலான கட்டணம் ரூபா 44 ஆகும்.

கூறப்பட்டுள்ளது அத்துடன் அரசாங்கம் இவ்விவகாரத்தில் உடன் தலையிட வேண்டும்

## க. பொ. த. (சா/த) முன்னோடித் தேர்வு

க. பொ த முன்னோடித் தேர்வில் சங்கீதம் - நடனம் செயன்முறைத் தேர்வு நடத்தும் பிரதம - உதவிப் பரீட்சகர்கள் யாவருக்கும் நியமன கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எல்லாப் பிரதம உதவிப் பரீட்சகர்களும் 28- 10- 92 புதன்கிழமை அன்று மு. ப. 10.00மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்திற்குத் தவறாது சமுகம்தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

## தமிழீழ பொதுக்கல்விதேர்வு நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு முன்னோடிப் பரீட்சை ஐந்து மாவட்டங்களிலும் திட்டமிட்டபடி நாளை ஆரம்பமாகும் எனவும் இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி விட்டதாகவும் பரீட்சை ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

மேற்படி க. பொ. த சாதாரண தர முன்னோடித் தேர்வுப் பரீட்சைக்கு இம்முறை 147 பரீட்சை நிலையங்களில் 17232 மாணவர்கள் தோற்றுகின்றனர். யாழ். மாவட்டத்தில் 109 பரீட்சை மண்டபங்களில் 13378பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 16 மண்டபங்களில் 1402 பேரும் முல்லை

(04 ஆம் பக்கம் பார்க்க)

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் 3ஆம்திகதி சிறிலங்கா இராணுவம் மேற்...

...ளைத் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் தங்கியிருந்த நூற்றுக்கணக்கான பொதுமக்களை தேசத்துரோகிகளுடன் இணைந்து இராணுவம் கைது செய்துள்ளது.

பெரிய கட்டைக்காடு, இலகடிப்பிட்டி, புதுக்கமம், முதலைக்குத்தி, காத்தான்குளம் ஆகிய பகுதிகளில் சிக்கியிருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த வியாழக்கிழமை மேற்படி பகுதிகளில் ... தங்கியிருந்தோர்களை வயது வேறுபாடின்றி கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

மேற்படி பொதுமக்களைக் கைது செய்த இராணுவத்தினருக்கு புளொட், ரெலோ போன்ற தேச விரோதிகளும் முகமூடி அணிந்தோரும் உதவி புரிந்ததாகத் தப்பிவந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

## 'விடுதலைப் புலிகள்' வெளிவந்துள்ளது

இம்மாத ''விடுதலைப் புலிகள்'' ஏடு வெளிவந்துள்ளது. ''சிறிலங்கா படைத் துறைத் தலைமையின் புதிய போர் முறைத்திட்டங்கள்'' என்ற தலைப்பிலான முன் பக்க செய்தியுடன், 'ஆனையிறவு பாதை திறப்பும், யாழ் குடாநாட்டின் பாதுகாப்பும்' என்ற தலைப்புடன் ஒரு விளக்கக் கட்டுரையும் வெளிவந்துள்ளது.

இத்துடன் 'படை அமைப்பும் பதவி நிலைப்பட்டிகளும்' என்ற தலையங்கத்துடன் ஒரு இராணுவக் கட்டுரை வெளிவந்துள்ளது. இக்கட்டுரையுடன் இணைப்பாக சிறிலங்கா படைகளின் பதவி நிலைப்பட்டிகளின் மாதிரிப் படங்கள் பல வர்ணத்தில் அச்சிட்டுசேர்க்கப்பட்டுள்ளது.

மேலும், அண்மையில் நடந்

(04 ஆம் பக்கம் பார்க்க)

# கறுப்பு வெள்ளி தினத்தில் முஸ்லிம் இளைஞர் பலி

## பொலிஸ் துப்பாக்கிச் சூட்டின் விளைவு

[கொழும்பு]

கடந்த வெள்ளிக்கிழமை மருதானை மருதியில் நடைபெற்ற சம்பவத்தில் அப்துல் சமக் என்ற இளைஞர் சுடப்பட்டு மரணம் அடைந்துள்ளார்.

பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இவர் மரணம் அடைந்ததாகவும் இவரது சடலம் நேற்று முற்பகல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இஸ்லாம் சமயத்தில் ஒருவர் மரணம் அடைந்தால் ஆகக் கூடியது இருபத்திநான்கு மணி நேரத்தில் அவரின் சடலம் அடக்கம் செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் சடலம் ஒப்படைக்க காலதாமதமாகியது குறித்து அரசு மீது கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கறுப்பு வெள்ளியை சிங்களவர் புறக்கணிப்பு

நேற்று முன்தினம் முஸ்லிம் காங்கிரசினால் ஒழுங்கு செய்யப்பட்ட கறுப்பு வெள்ளி சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் வெற்றி அளிக்கவில்லை என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாறாக அரசுக்கும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பிற்கும் எதிரான சுவரொட்டிகள் காணப்பட்டதாகவும் தெரியவருகின்றன.

## புலிகளின் பலம் குறைக்கப்பட வேண்டும்

### செல்லச்சாமி

புலிகளின் பலத்தைக் குறைக்க வேண்டும் இதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது இவ்வாறு வியாழனன்று பாராளுமன்றத்தில் பேசிய கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி குறிப்பிட்டார் அவர் அங்கு பேசுகையில்; மேலும் புலிகள் இயக்கம் இன்று ஆயுதமேந்திப் போராடுகிறது இந்த யுத்தத்தினால் தினமும் பல கோடி ரூபா செலவாகிறது. வேறு யாராவது இன்று ஆட்சியில் இருந்திருந்தால் பதவியைக் கைவிட்டு ஓடியிருப்பர் ஆனால் பிரேமதாசா இந்த நிலையிலும் நாட்டை சிறப்பாக நிர்வகிக்கின்றார் என்றும் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் குறித்து

## சிறிலங்கா எதிர்க்கட்சிகள் மக்களிடம் விளக்கம்

அவசரகாலச்சட்டம், அதன் கீழ் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விளக்கமளிக்க சிறிலங்கா எதிர்க்கட்சிகளின் கூட்டுமுன்னணியினர் மக்களை நேரடியாக சந்தித்து வருகின்றனர்.

தென்னிலங்கையில் மக்கள் கூடும் இடங்களில் இவர்கள் கூட்டாகச் சென்று மக்கள் மத்தியில் இவ்விடயங்கள் குறித்து விளக்கம் அளித்துவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்குழு சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிரமுகர் ரிட்சாட் பத்திரண தலைமையில் இயங்கி வருவதாகவும் இக்குழுவில் ஏனைய கட்சி தலைவர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், தொழிற்சங்கவாதிகள் ஆகியோர் பங்கு கொள்வதாகவும் தெரியவருகிறது.

**கண்ணை இமைகாக்கும்**
**மண்ணை மரம் காக்கும்**

## வரி விளம்பரம்

### மாணவர்களுக்கான புத்தகங்கள்

கல்லூரிமாணவர்களுக்கான புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் தினேஸ் புத்தகசாலை, 19 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (3214)

### தவறி விட்டது

ம. ருக்மா [மூத்ததம்பி ஒழுங்கை மானிப்பாய்] என்பவருடைய இல. 675964122v அடையாள அட்டை யாழ்ப்பாணம் பெரிய கடை புடைவைக் கடைப் பகுதியில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலத்தில் ஒப்படைக்கவும். (3522)

### நீம் சுகாதார தூபம்

நுளம்புத்தொல்லை - மலேரியாக் காய்ச்சல், பரவுகிறது. பத்திரிகைச் செய்தி. ''நீம்'' இருக்கப் பயமேன்? மில்க்வைற் அபயக்குரல். நீம் சுகாதார தூபம் நுளம்புத் தொல்லையிலிருந்து விடுதலை தருகிறது. ஓர் இயற்கைப் பாதுகாப்பு-அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது.
(சி-5299) ''மில்க்வைற்''

### உடன் விற்பனைக்கு உண்டு

HY - LINE PRIMA BHIRA
கைலைன்வெள்ளை, கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகளுக்கும் உடன் தொடர்பு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை' மானிப்பாய். (3503)

### ஜெயா அழகு சாதன மாளிகை

எவர் சில்வர், பிளாஸ்ரிக், தையல் உபகரணங்கள் பன்சி கூட்ஸ் பொருள்கள். மொத்த சில்லறை விற்பனை நிலையம். ஜெயா அழகு சாதன மாளிகை 177- A மின்சார நிலைய வீதி 160, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம். (சி-5250)

### மாணவருக்கான கையேடு

''பரீட்சைகளுக்கான ஆயத்தமும் அவற்றை வெற்றிகரமாக எதிர் கொள்ளலும்'' உளவியல் சஞ்சிகை தனிப் பிரதி—ரூபா 12-00. தேவையானோர் பதினைந்து ரூபா முத்திரை அனுப்பிப் பெற்றுக்

---

ஊரெங்கும் மணக்கும்
தீரமிகு தீபாவளி வாழ்த்துக்கள்
வகை வகையான புடைவைகளுக்கு

## லலிதா

புடைவை மாளிகை
இல - 05,06, நவீனசந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்
(சி/5306)

---

தீபாவளித் திருநாள்
வாழ்த்துக்கள்

எல்லா விதமான புடைவை வகைகளும்
ஒரே இடத்தில்

## விக்கினேஸ் ரெக்ஸ்

45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-5309)

---

## எம். ஆர். எஸ். போக்குவரத்துச் சேவை

பூநகரி — முள்ளியவளை — தண்ணீரூற்று

### புதிய பஸ்சேவை

பூநகரி நல்லூரிலிருந்து புதுக்குடியிருப்பு ஊடாக ஒட்டுசுட்டான்,
முள்ளியவளை, தண்ணீரூற்று வரை

20 - 10 - 1992 ஆம் திகதியிலிருந்து

எம். ஆர். எஸ். போக்குவரத்துச் சேவையினரால்
புதிய பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

★ பூநகரி நல்லூர் இரவு 12.00 மணிக்குப் புறப்படும் பஸ் முள்ளியவளை தண்ணீரூற்றுக்கு அதிகாலை 04.30 மணிக்குச் சென்றடையும்.

---

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

புடைவை வியாபாரத்தின்
முன்னோடிகள்

## சண்முகானந்தா ரெக்ஸ்ரையில்ஸ்

23, பெரியகடை, யாழ்ப்பாணம்
(சி-5308)

---

தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்

குழந்தைகள் தொடக்கம் பெரியோர் வரை
குதூகலத்துடன் அணியக்கூடிய
பாதணிவகைகளுக்கு

## பி(F)றாங் பாதணி நிலையம்

16(38) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-5307)

---

தீபாவளி வாழ்த்துக்கள் ஆயிரம்

ராசிப்புடைவைத் திணிசுகளுக்கு

## ராசி சில்க்

70, 71 நவீனசந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்.
(சி-5310)

மாளிகை

எவர் சில்வர், பிளாஸ்ரிக், தையல் உபகரணங்கள் பன்சி கூட்ஸ் பொருள்கள். மொத்த சில்லறை விற்பனை நிலையம். ஜெயா அழகு சாதன மாளிகை 177- A மின்சார நிலைய வீதி 160, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம். (சி-5250)

## மாணவருக்கான கையேடு

''பரீட்சைகளுக்கான ஆயத்தமும் அவற்றை வெற்றிகரமாக எதிர் கொள்ளலும்'' உளவியல் சஞ்சிகை தனிப் பிரதி—ரூபா 12-00. தேவையானோர் பதினைந்து ரூபா முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம் முகவரி ஜோ. எக்கட்டன் 193 கொழும்புத் துறை வீதி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரிஎதிர் ஒழுங்கை,— சுண்டிக்குளி சபாரிசிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-5231)

## நடிக்கிறீர்களா?

'எனது கெட்டிக்காரர்கள்' முதலாம்பிள்ளை,30/- நூல்களிலுள்ள 19 நாடகங்களையும் நடிக்கிறீர்களா? என்னையும் கலந்தாலோசியுங்கள். நடிக்கும் முறை சொல்லித்தருவேன். அராலியூர் சுந்தரம் பிள்ளை 30, கடைச்சாமிவீதி, நீராவியடி யாழ்ப்பாணம். (3212)

## குடிமனைகள் மீது துப்பாக்கிசூடு

(சுன்னாகம்)

நேற்று முன்தினம் இரவும், நேற்று பகலிலும், தெல்லிப்பழைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் குடிமனைகள் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

மேலும், நேற்று மதியம் 11 30 மணியளவில் உலங்கு வானூர்தி ஒன்று சுன்னாகம், ஏழாலை வடக்குப்பகுதிகளை வட்டமிட்டுச் சென்றது அவ்வுலங்கு வானூர்தி கட்டுவன் இராணுவ நிலைகளை அடுத்துள்ள பகுதிகளில் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டது. [11]

## எறிகணை வீச்சு

[யாழ்ப்பாணம்]

கட்டுவன் புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளை நோக்கி சிறிலங்கா இராணுவதினர் பலத்த எறிகணைத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம் பெற்றது. அத்துடன் நேற்றுக் காலையும் ஏழாலைப் பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. [9]

# எம். ஆர். எஸ். போக்குவரத்துச் சேவை

பூநகரி — முள்ளியவளை — தண்ணீரூற்று

## புதிய பஸ்சேவை

பூநகரி நல்லூரிலிருந்து புதுக்குடியிருப்பு ஊடாக ஒட்டுசுட்டான், முள்ளியவளை, தண்ணீரூற்று வரை

20 - 10 - 1992 ஆம் திகதியிலிருந்து

**எம். ஆர். எஸ். போக்குவரத்துச் சேவையினரால்**
புதிய பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

★ பூநகரி நல்லூர் இரவு 12.00 மணிக்குப் புறப்படும் பஸ் முள்ளியவளை தண்ணீரூற்றுக்கு அதிகாலை 04.30 மணிக்குச் சென்றடையும்.

★ ★ நண்பகல் 02.00 மணிக்கு புறப்பட்டு பூநகரி — நல்லூர் 05-30 மணிக்கு சென்றடையும்.

இச்சேவை தினமும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

★ உங்கள் ஆதரவிற்கு நன்றி ★

எம். ஆர். எஸ். போக்குவரத்துச் சேவை,
கிளிநொச்சி.

(சி-5305)

பருத்தித்துறை நகராட்சி மன்றம்

# 1993-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் குத்தகைகள் சார்பில், 01- 01- 1993-ம் திகதி தொடக்கம் 31-12 1993-ம் திகதி வரைக்கான காலப்பகுதிக்குரிய கேள்விகள் 11-11-1992-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் பருத்தித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் 06-11-1992-ம்திகதி பிற்பகல் 3-00 மணி வரை கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்க முடியாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்துவதன்பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் ''செயலாளர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டுத் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத் தபால்மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படவேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விபரங்களையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை

| | குத்தகை விபரம் | ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | மரக்கறிச் சந்தை | ரூபா. 61, 600/- | ரூ.1500/- | ரூ.150/- |
| 2. | மீன் சந்தை | ரூபா. 12, 320/- | ரூ. 1500/- | ரூ. 150/- |
| 3. | வான்வண்டிக்காலை | ரூபா. 6, 160/- | ரூ.1500/- | ரூ. 150/- |
| 4. | மிதிவண்டி பாதுகாப்பு நிலையம் | ரூபா. 3,850/- | ரூ. 500/- | ரூ. 100/- |
| 5, | மாட்டிறைச்சிக் கடை | ரூபா. 66,000/- | ரூ. 1500/- | ரூ 150/- |
| 6, | ஆட்டிறைச்சிக் கடை | ரூபா. 27,500/- | ரூ. 500/- | ரூ. 100/- |

ச. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை, 23 - 10 - 1992
(சி/ 5298)

ராசிப்புடைவைத் திணிசுகளுக்கு

# ராசி சில்க்

70, 71 நவீனசந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்.

(சி-5310)

**University Of Jaffna**
**Tender Notice**

Tenders are invited for the Following from contractors registered for buildings works with University of Jaffna or ICTAD

a) Repairs / painting to Balasingam Hall

b) Repairs / Painting to Physics block

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 27-10 92 — 30-10 92 during office hours upon producing receipt from Bursar, University of Jaffna for the following for each tender.

a) Refundable deposit- Rs. 2000/-

b) Non - refundable deposit - Rs. 200/-

Perfected tenders to be sent to reach Registrar, University of Jaffna before 10 00 a.m. on 12-11-92.

Tender board, University of Jaffna reserves the right to reject any tender.

Registrar
University of Jaffna
Thirunelvely, Jaffna.

[சி-5291]

# நினைவு கூருகின்றோம்
## 1992-10-26

1984ஆம்ஆண்டு இதே தினத்தில், அக்கரைப்பற்றுப் பகுதியில் தேச விரோதிகளினால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

★சபாபதிப்பிள்ளை அழகையா (தம்பிலுவில)

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் பூநகரிப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -

பயஸ்

1987ஆம் ஆண்டு யாழ்- கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில், இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

குட்டி (கனகராசா பிறேமன்ராஜ் • 75, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்)

குச்சவெளி பேராறுப் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

குமாரதாஸ் (காசிராஜா ஞானசேகரம் லிங்கநகர் திருக்கோணமலை)

சூறாவத்தை, அளவெட்டி, புத்தூர் ஆகிய பகுதிகளில், இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 10 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு பாவற்குளத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

சாவகச்சேரியில், இந்தியப்படை மற்றும், தேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட தென்மராட்சி பிரஜைகள் குழுத்தலைவரும், சட்டத்தரணியுமான தமிழ்ப் பொதுமகன்

1989 ஆம் ஆண்டு மன்னாரில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட கரடிக்குழி, மறிச்சுக்கட்டி பகுதிகளைச் சேர்ந்த 3 தமிழர்கள்:

ஆகியோரை இந்நாளில்
நினைவுகூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5297)

சிந்தனைக்கு

ஒவ்வொன்றிலும் ஒரு படிப்பினை உண்டு—
அதைக் காண்பதுதான் முக்கியம்
— லூயி கேரல்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 26-10-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## இஸ்ரேலின் பாடம்

அரபு - இஸ்ரேல் சமாதான முயற்சியின் ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வாஷிங்டனில் ஆரம்பமான போது கைப்பற்றப்பட்ட எல்லைகளில் இருந்து வெளியேறுவதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு இஸ்ரேல் இணக்கம் தெரிவித்துள்ளதோடு இது தொடர்பான அறிக்கை ஒன்றை இஸ்ரேல் சிரியாவிடம் கையளித்தும் உள்ளது.

இஸ்ரேலின் இந் நடவடிக்கை பலஸ்தீனப் பிரச்சினை தீர்வை எட்டுவதற்கு போதுமானது என்று கூறிவிட முடியாது என்பது உண்மையானாலும், மத்திய கிழக்குச் சமாதானப் பேச்சுவார்த்தையின் ஓர் முன்னேற்ற கரமான அம்சம் என்பதும், சமாதானம் ஒன்று ஏற்படுவதற்காகச் சிலவிட்டுக் கொடுப்புக்களை இஸ்ரேல் செய்வதற்கு தயாராகி வருவதையும் இது காட்டுகிறது என்பதில் சந்தேகப்பட எதுவுமில்லை.

கடந்த செப்டம்பர் 24 ஆம் திகதி நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது கைப்பற்றிய எல்லையோரங்களில் இருந்து வெளியேறுவது குறித்து கடுமையாக விவாதித்துவந்த இஸ்ரேல், சுமார் ஒரு மாதத்திற்குள் இவ்வாறான தொரு முடிவை எடுத்துள்ளது. அதாவது சமாதானம் ஏற்பட சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்தாக வேண்டும் என்பதை இஸ்ரேல் உணர்ந்துள்ளமையையே இது காட்டுகிறது.

அதாவது இஸ்ரேலின் கைப்பற்றிய எல்லையில் இருந்து வெளியேறும் அறிவிப்பானது சிரிய-இஸ்ரேலிய உறவில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. மத்திய கிழக்குச் சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால், 1967ஆம் ஆண்டுப் போரில், இஸ்ரேல், சிரியாவிடம் இருந்து கைப்பற்றிய கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த கோலான் குன்றுகளில் இருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும் என சிரியா தொடர்ந்து வற்புறுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மத்திய கிழக்கில் சிரியாவின் சம்

# திராவிட கட்சிகளும் தனித் தமிழ் நாட்டு கோரிக்கையும்

இந்திய உபகண்டத்தில் இப்போது பரவலாக தனிநாட்டுக் கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன பஞ்சாப்பிலும், காஷ்மீரிலும், அசாமிலும் தனிநாட்டுக் கோரிக்கையினால் ஓர் உள்நாட்டு யுத்தமே நடந்துகொண்டிருக்கின்றது. அந்த நிலையில் இந்தியாவின் ஒருமைப்பாடென்பது கேள்விக்கு உரியதாக மாறி வருகிறது.

இந்தியாவில் தனிநாட்டுக் கோரிக்கைகளும். ஆயுதப் போராட்டங்களும் இந்தியா சுதந்திரம் அடைந்ததில் இருந்தே தொடர்ந்து வருகிறது. இந்தியாவில் முதலில் தனிநாட்டுக் கோரிக்கை என்பது தென்நாட்டில் இருந்துதான் எழுந்தது. இத்தென் நாட்டில் அனேகமாக எழுந்த தனிநாட்டுக் கோரிக்கையைச் சலுகைகள் வழங்கியதன்மூலம் இராணுவப் பயமுறுத்தல்கள் மூலமும் இந்தியநடுவண் அரசுகள் நசுக்கியுள்ளன.

தென் நாட்டில் அதாவது சென்னை மாகாணத்தில் இருந்துதான் முதலில் திராவிட நாட்டுக் கோரிக்கைஎழுந்தது. பின் இக்கோரிக்கை கைவிடப்பட்ட நிலையில் தென்நாடு மொழிவாரி மாநிலங்களாக பிரிக்கப்பட்டது. இக்கோரிக்கை கைவிடப்பட்டாலும் ஆந்திரா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் சிறு குழுக்களால் தனிநாட்டுக் கோரிக்கை என்பது கைவிடப்படவில்லை என்பதேஉண்மை. ஆந்திராவில் நக்சல் பாரிகளால் முன்னெடுக்கப்படுவது போல் தமிழ்நட்டிலும் சிறு சிறு குழுக்களால் முன்னெடுக்கப்பட்டாலும் அவற்றின் செயற்பாடுகள் ஆந்திர நக்சல்பாரிகளது நடவடிக்கைகள் அளவுகூட இல்லை என்பதே உண்மை.

ஆரம்பத்தில் தனிநாட்டுக் கோரிக்கைக்கு தமிழ்நாட்டில் வித்திட்டவர்கள் திராவிட இயக்கத்தினரே. திராவிட இயக்கத்தால் தனிநாட்டுக் கோரிக்கை கைவிடப்பட்ட பின்னரும்கூட காலத்துக்கு காலம் அரசியல்இலாபம்கருதி அவை தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடவில்லை என்றும் அல்லது மீண்டும் தனிநாட்டுக் கோரிக்கையை ஊக்குவித்தனர் என்றும் தேசியக் கட்சிகளால் ஆதாரம் அற்ற குற்றம் சுமத்தப்படுவதும் பின் அக்கதை அப்படியே அடிபட்டுப்போவதும்வழமையான தொன்றாகும் (இவ்வாறான குற்றச்சாட்டுகள் திராவிடக்

படும் குற்றச்சாட்டு இம்முறை திராவிடக் கட்சியான அ. தி. மு. கவினாலேயே வேறோர் மாநிலக் கட்சிமீது சுமத்தப் பட்டுள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சியினால் நடாத்தப்பட்ட தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் சிலர் உரையாற்றும்போது "இந்தியாவில் இருந்து தமிழ் நாட்டை பிரிக்கவேண்டும் என்ற கோட்பாட்டுக்கு காரணமாய் அமைந்த மூன்று தசாப்தங்களுக்கு முந்தய காரணிகள் இன்னும் தமிழ் நாட்டில் காணப்படுகின்றன" எனக் கூறியுள்ளனர். இது போன்ற பேச்சுக்கள் தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கையை ஊக்குவிப்பதாகவே பா. ம. க, மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது

மாநிலங்களின் சுயாட்சிக் கோரிக்கை என்பது இந்தியாவில் இன்று நேற்று ஏற்பட்டது அல்ல அது, இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பே உருப்பெற்று விட்ட ஒன்றாகும். இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிககாலத்தில் பிராமணிய ஆதிக்கத்திற்கு எதிராக எழுந்த கருத்தே பின் மெல்ல வளர்ந்து தமிழ் நாட்டுப் பிரிவினை வாதத்திற்கு வித்திட்டது எனலாம்.

பிராமணிய ஆதிக்கத்திற்கு எதிராக 1912ஆம் ஆண்டு மி. தியாகராஜா செட்டியார் ரி எம் நாயர், மருத்துவர், நடேசன், போன்றவர்களால் சென்னை ஒன்றியம் சங்கம் தொடங்கப்பட்டது இது 1914ஆம் ஆண்டு தென்னிந்தியா மிதவாத கழகம் (South Indian Liberal Federation) என்ற பெயரில் கட்சியாகச் செயற்படத் தொடங்கியது. இதுவே பின் நீதிக் கட்சியாக மாறியது. திராவிட நலனுக்கென பிராமணுயஆதிக்கத்தை எதிர்த்து தனி அமைப்பை உருவாக்கியதன்மூலம்மிதியாகராஜா, ரி. எம். நாயர், மருத்துவர் நடேசன் போன்றவர்கள் திராவிட நாட்டு கோரிக்கைக்கு வித்திட்டனர்

பிராமணியத்தை எதிர்த்து திராவிடர் நலனுக்கென தொடங்கப்பட்ட நீதிக் கட்சி 1920 இல் இருந்து 1935வரை சென்னை மாகாணத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. இக் கட்சி ஆட்சிப் பொறுப்

திணிப்பை எதிர்த்து சிறையில் இருந்து ஈ வே இராமசாமிப் பெரியார் அவர்களிடம் தலைமைப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. பிராமணியத்தை கடுமையாக சாடிவந்த மிகத் தீவிரவாதப் போக்குடைய பெரியார் அவர்களிடம் நீதிக் கட்சித் தலைமை சென்றதனால்நீதிக்கட்சிமீண்டும்எழுச்சி பெற்றது.

சிறையில் இருந்தபடியே தலைமைப் பொறுப்பேற்ற பெரியார் அவர்கள் நீதிக்கட்சியை திராவிடர் கழகமாக சமூக சீர் திருத்த கட்சியாக மாற்றியதுடன் 1944 ஆம் ஆண்டு திராவிடக்கழகத்தின் 1ஆவது மாநாட்டை சேலத்தில கூட்டினார். இம்மாநாட்டில்தான்முதல்முதலாகதமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாமொழிபேசும் நாடுகள் வடவர்களின் ஆதிக்கத்தில் இருந்து தனியே பிரிந்து திராவிட நாடு ஆக வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறாக திராவிடர் கழகத்தால் முன்னெடுக்கப்பட்ட தனினாட்டுக் கோரிக்கையானது 1948 ஆம் ஆண்டு 72 வயதான பெரியார் அவர்கள் 28 வயதான மணியம்மையை திருமணம் செய்ததினால் அதை எதிர்த்து திராவிடர் கழகத்தில்இருந்துவெளியேறிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகரான திரு சி. என் அண்ணாதுரையினால்முன்னெடுக்கப்பட்டது, இவ்வாறாக திராவிடர் கழகம் இரண்டாக உடைந்த நிலையில் தமிழ்நாட்டில் தனி தமிழ் நாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவானகட்சிகள் இரண்டு உருவாகின.

தனது தாய் கட்சியின் இருந்து பெற்ற தனிநாட்டுக் கோரிக்கையை அறிஞர் அண்ணாத்துரையின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகமும் 1962 ஆம் ஆண்டு வரை போற்றி வந்தது. 1962 ஆம் ஆண்டு நேரு அரசாங்கத்தால் இந்திய பாராளுமன்றத்தில் பிரிவினை வாதத்துக்கு எதிராக அரசியல் யாப்பில் சட்டம் வரையப்பட்டது. இவ்வாறு அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட சட்டம் இந்தியாவில் உள்ள அனைத்துப் பிரிவினை சக்திகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்

அ. தி. மு. கவுமே மாறி மாறி ஆட்சிப் பொறுப்பில் இருக்க, முதலில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த தேசியக் கட்சியான காங்கிரஸ் கட்சி மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டது. இவற்றை வைத்து தமிழ்நாட்டு மக்கள் மனதில் தனிநாட்டுக் கோரிக்கைக்கு உள்ள ஆதரவைப் புரிந்து கொள்ளலாம். ஆதரவு இல்லாது இருந்தால் தேசிய கட்சியான காங்கிரஸ் கட்சி மூன்றாவதுஇடத்திற்கு தள்ளப்பட்டிருக்கவும் மாட்டாது தன் நாட்டுக் கோரிக்கையை முன் வைத்து திராவிட பாரம்பரிய கட்சிகள் ஆட்சி பிடித்திருக்கவும் முடியாது.

தமிழ் நாட்டில் தற்போது திராவிட பாரம்பரியத்தில் இருந்து தோன்றிய கட்சியான திரு எம். ஜி. ஆர் அவர்களால் தாபிக்கப்பட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை பிராமண சமூகத்தவரான ஜெயலலிதாவிடம் சென்றுள்ளது. ஆரம்பத்தில் இந்திய தேசிய காங்கிரசில் பிராமணிய தலைமைகள் நிறைந்து பிராமணிய ஆதிக்கமாக இருந்ததனாலேயே திராவிடக் கட்சிகள் தோன்றியது என்பது குறிப்பிடத் தக்கது. ஆனால் இன்று

## வன்னி

திராவிட பாரம்பரிய கட்சியான அ. தி. மு க, வின் தலைமையே ஓர் பிராமண சமூகத்தவரிடம் இருப்பது ஒரு வரலாற்றுப் பிறழ்சியாகும்.

இவ்வாறாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை ஜெயலலிதாவிடம் சென்றதிலிருந்து அக்கட்சி எஞ்சியிருந்த அற்ப சொற்ப திராவிட தன்மையும் இழந்து வருகிறது. இனி இக் கட்சியினால் உண்மையான திராவிட கொள்கைகள் முன்னெடுக்க முடியும் என்பது சந்தேகமே.

திராவிட பாரம்பரிய கட்சியான அ. தி. மு.க.வின் நிலை இவ்வாறிருக்க மற்றைய கட்சியான தி. மு. க, வின் நிலையும் அதுவே. தி. மு. க. தான் ஆட்சியை பிடிப்பதற்கு திராவிட கொள்கைகளை முன்

ஓர் 'சாதிய' அடிப்படையில் தோன்றிய கட்சியான பாட்டாளி மக்கள் கட்சியினால் முன்னெடுக்கப்படுவது போல் தெரிகிறது. இக்கட்சிதிராவிட கழகத்தை தாய்க்கட்சியாகக் கொள்ளாவிட்டாலும் இக் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர்களான பண்ருட்டி இராமச்சந்திரன், நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி போன்றோர் திராவிடக் கட்சிகளில் இருந்து வந்தவர்களே.

பாட்டாளி மக்கள் கட்சி ஆரம்பத்தில் வன்னியர் சங்கம் என்ற பெயரில் டாக்டர் ராமதாஸ் அவர்களால் தமிழ் நாட்டிலுள்ள ஓர் சாதியினராகிய வன்னியத் சமூகத்தவர்க்கு கூடுதல் ஒதுக்கீடு கேட்டுப் போராட ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். வன்னியர் சங்கம் தமிழ்நாடு பூராகவும் உள்ள வன்னியர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதால் இச்சங்கம் ஓர் வாக்கு வங்கியாக தமிழ்நாட்டுக் கட்சிகளால் கருதப்பட்டுவந்தது. இதனால் அ. தி. மு கவும் தி. மு கவும் தேர்தல் காலங்களில் இச்சங்கத்தின் ஆதரவைப் பெற அவர்களுக்கு சில வாக்குறுதிகளை வழங்கினர், அவை தேர்தலில் வெற்றி பெற்ற பின்பு அவர்களது கோரிக்கைகள் தட்டிக் கழிக்கப்பட்டுவந்தன. இந்த நிலையில்தான் வன்னியர் சங்கத்தினர் தேர்தலில்தாமே போட்டியிட்டு தமிழ்நாடு சட்டசபை சென்று வன்னியர்க்காக குரல் கொடுக்கப்போவதாக கூறிக் கொண்டு வன்னியர் சங்கத்தை பாட்டாளி மக்கள் கட்சி என்று பதிவுசெய்து கொண்டனர்.

பாட்டாளி மக்கள் கட்சி தனது வன்னிய சமூகத்திற்கு மட்டும் என்ற நிலையை மாற்றி பாட்டாளி மக்களுக்காக உழைக்கும் கட்சியாக தன்னை இனம் காட்ட முற்பட்டுள்ளது இக் கட்சி தமிழ் நாட்டில் வன்னியர் சமூகத்தவர் செறிந்துவாழும் பகுதிகளான தென்னாற்காடு, வட ஆற்காடு திண்டிவனம்போன்ற பகுதிகளில் செல்வாக்குப்பெற்றுள்ளது.

பாட்டாளிமக்கள் கட்சியும் ஆரம்பத்தில் திராவிட கட்சிகள் தெரிவித்தது போலவே தமிழக மக்களின் சுயநிர்ணய கோரிக்கையைப் பின்பற்றுவதாகக் கூறிவருகின்றது. ஆனால் இக் கட்சியும் திராவிட கட்சிகள் போல் ஆட்சி

...தொரு முடிவை எடுத்துள்ளது. அதாவது சமாதானம் ஏற்பட சில விட்டுக் கொடுப்புகளைச் செய்தாக வேண்டும் என்பதை இஸ்ரேல் உணர்ந்துள்ளமையையே இது காட்டுகிறது.

அதாவது இஸ்ரேலின் கைப்பற்றிய எல்லையில் இருந்து வெளியேறும் அறிவிப்பானது சிரிய-இஸ்ரேலிய உறவில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. மத்திய கிழக்குச் சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால், 1967ஆம் ஆண்டுப் போரில், இஸ்ரேல், சிரியாவிடம் இருந்து கைப்பற்றிய கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த கோலான் குன்றுகளில் இருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும் என சிரியா தொடர்ந்து வற்புறுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மத்திய கிழக்கில் சிரியாவின் சம்மதமின்றி ஓர் சமாதான நிலை உருவாவதற்கான வாய்ப்பும் காணப்படுவதாக இல்லை. இஸ்ரேலுக்கு அண்மையில் உள்ள பலம் பொருந்திய அரபு நாடு சிரியா என்பதோடு, நான்கு தடவைகள் போரில் ஈடுபடும் அளவிற்கு பெரும் பிணக்குகளும் இந் நாடுகளுக்கு இடையில் உள்ளது. அத்தோடு, இஸ்ரேலின் அடுத்த அண்டை நாடான லெபனானிலும், சிரிய துருப்புக்கள் நிலை கொண்டுள்ளதோடு, அரசாங்கத்தையும் கட்டுப்பாட்டிற் கொண்டுள்ளன.

ஆனால், இஸ்ரேலைப் பொறுத்து மத்திய கிழக்கில் இராணுவ ரீதியாக ஓர் குறிப்பிடக் கூடிய வெற்றியையும், பலத்தையும் பெற்றுள்ள போதும் 45 வருடங்களாகத் தொடர்ந்து வரும் பலஸ்தீனப் பிரச்சினைக்குஒருமுடிவு வர விரும்புவதாகத் தெரிகின்றது. அதாவது. தொடர்ந்து போரிடவும், அதன்மூலம், மனித இனத்தையும், பொருளாதாரத்தையும் இழக்க இஸ்ரேலியர் தயாராக இல்லை என்றே கூறலாம். இந் நிலையிலேயே இஸ்ரேலியர் எவ்வாவோ இழப்புக்களின் பின்னர் கைப்பற்றிய பிரதேசங்களை விட்டுக் கொடுத்தாவது சமாதானத்தை உருவாக்க முற்படுவதாக தெரிகின்றது.

இஸ்ரேலின் இந்நடவடிக்கை எந்தளவிற்கு பலஸ்தீனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும், அல்லது இன்னமும் இஸ்ரேல் இப்பிரச்சினைத் தீர்விற்காக எந்தளவு தூரத்திற்கு இறங்கிவரும் என்பதெல்லாம் திட்டவட்டமாகக் கூறமுடியாவிட்டாலும், இஸ்ரேல் தளர்ச்சிப் போக்கைக் காட்டத் தொடங்கியுள்ளது என்பதை எவரும் மறுக்க இயலாது.

அதாவது, இஸ்ரேலின் இம்முடிவானது தலையணையின் அடியில் எப்பொழுது குண்டு வெடிக்கும் என்ற நிலையில் எவ்வளவு காலமும் வாழலாம் என்பது சாத்தியமானதல்ல என்பதை உலகிற்கு உணர்த்தியுள்ளது.

இதனைச் சிறிலங்காவும் புரிந்துகொள்ள வேண்டும். சிரியாவுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இஸ்ரேல் உருவாக்கியது போன்ற ஓர் நல்ல அடித்தளத்தை உருவாக்கும்போதே இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வை எட்ட முடியும். பலம் பொருந்திய ஒரு இஸ்ரேலின் பாடத்தையாவது, பலவீனமான ஒரு சிறிலங்கா விளங்கிக் கொள்ளுமா?

...செயற்பாடுகள் ஆந்திர நக்சல்பாரிகளது நடவடிக்கைகள் அளவுகூட இல்லை என்பதே உண்மை.

ஆரம்பத்தில் தனிநாட்டுக் கோரிக்கைக்கு தமிழ்நாட்டில் வித்திட்டவர்கள் திராவிட இயக்கத்தினரே. திராவிட இயக்கத்தால் தனிநாட்டுக் கோரிக்கை கைவிடப்பட்ட பின்னரும்கூட காலத்துக்கு காலம் அரசியல்இலாபம்கருதி அவை தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடவில்லை என்றும் அல்லது மீண்டும் தனிநாட்டுக் கோரிக்கையை ஊக்குவித்தனர் என்றும் தேசியக் கட்சிகளால் ஆதாரம் அற்ற குற்றம் சுமத்தப்படுவதும் பின் அக்கதை அப்படியே அடிபட்டுப்போவதும்வழமையானதொன்றாகும் (இவ்வாறான குற்றச்சாட்டுகள் திராவிடக் கட்சிகள் மீதே சுமத்தப்பட்டு வந்தன)

அண்மையில் தமிழ் நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சி எனும் மாநிலக் கட்சியினால் சென்னை மாநகரில் தமிழர் வாழ்வுரிமை மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் தமிழ் நாட்டுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டித் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதாகவும். இலங்கையில் தமிழீழம்அமைக்கப் போராடும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்காகவும், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர்களான டாக்டர் ராமதாசும், பண்ருட்டி இராமச்சந்திரனும் தமிழர் தேசியக் கட்சியின் தலைவர் ப. நெடுமாறனும், தமிழ் நாடு அ. தி. மு க, அரசினால் கைது செய்யப்பட்டனர்.

இதுகாலவரை தேசியக் கட்சி ஒன்றினால் சுமத்தப்...

நடேசன், போன்றவர்களால் சென்னை ஒன்றியம் சங்கம் தொடங்கப்பட்டது இது 1914ஆம் ஆண்டு தென்னிந்தியா மிதவாத கழகம் (South Indian Liberal Federation) என்ற பெயரில் கட்சியாகச் செயற்படத் தொடங்கியது. இதுவே பின் நீதிக் கட்சியாக மாறியது. திராவிட நலனுக்கென பிராமணிய ஆதிக்கத்தை எதிர்த்து தனி அமைப்பை உருவாக்கியதன்மூலம்மிதியாக ராஜா, ரி. எம். நாயர், மருத்துவர் நடேசன் போன்றவர்கள் திராவிட நாட்டு கோரிக்கைக்கு வித்திட்டனர்

பிராமணியத்தை எதிர்த்து திராவிடர் நலனுக்கென தொடங்கப்பட்ட நீதிக் கட்சி 1920 இல் இருந்து 1935வரை சென்னை மாகாணத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. இக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலங்களில் இந்தியா சுதந்திரம் கோரி எழுச்சி பெற்ற இந்திய தேசியக் காங்கிரசை ஓர் பிராமணியக் கட்சி எனக் கூறி கடுமையாக விமர்சித்ததுடன் ''இந்தியா சுதந்திரம் அடைந்து பிராமணியத்திடம் அடிமைப் படுவதிலும் பார்க்க ஆங்கிலேயரிடமே அடிமையாக இருக்கலாம்', எனக் கூறி இந்திய தேசிய காங்கிரசை நிராகரித்துஇதன் மூலம் ஆரம்பத்திலேயே திராவிடக் கட்சி தனது முதல் எதிரியாக பிராமணியத்தை மட்டுமன்றி இந்திய தேசிய காங்கிரசையும் இனம் காட்டியது எனலாம்

ஆட்சிப் பொறுப்பில் இருந்த நீதிக்கட்சி பதவி சண்டைகளாலும் உட்கட்சி பூசல்களாலும் வீழ்ச்சி அடைந்தது நீதிக் கட்சி வீழ்ச்சியடைந்த, மிகவும் பலவீனமான நிலையில்தான் 1938ஆம் ஆண்டு இந்தித்...

...என் அண்ணாதுரையினால்முன்னெடுக்கப்பட்டது,இவ்வாறாக திராவிடர் கழகம் இரண்டாக உடைந்த நிலையில் தமிழ்நாட்டில் தனி தமிழ் நாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவானகட்சிகள் இரண்டு உருவாகின.

தனது தாய் கட்சியின் இருந்து பெற்ற தனிநாட்டுக் கோரிக்கையை அறிஞர் அண்ணாத்துரையின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகமும் 1962 ஆம் ஆண்டு வரை போற்றி வந்தது. 1962 ஆம் ஆண்டு நேரு அரசாங்கத்தால் இந்திய பாராளுமன்றத்தில் பிரிவினை வாதத்துக்கு எதிராக அரசியல் யாப்பில் சட்டம் வரையப்பட்டது. இவ்வாறு அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட சட்டம் இந்தியாவில் உள்ள அனைத்துப் பிரிவினை சக்திகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தது. இதனால் திராவிட கட்சிகளின் தனிநாட்டுக் கோரிக்கைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

தனித் தமிழ்நாட்டுக் கோரிக்கையானது 1962 ஆம் ஆண்டுடன் இரகசியமாக முன்வைக்கப்பட வேண்டிய போராட்டமாக மாறியது, திராவிட கட்சியான தி. மு. கவும் அரசியலில் தீவிர பங்கு கொண்டது. பதவிப் போட்டிகளால் திராவிடக் கட்சிகளின் எண்ணிக்கையைப் பெருக்கினரே ஒழிய தம்மால் கைவிடப்பட்ட தனிநாட்டுக் கோரிக்கையை வேறுவடிவத்தில் கூட முன்னெடுக்காதுவிட்டனர்.

தனி நாட்டுக்கோரிக்கையை முன்வைத்த தி மு க. 1967 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றியதில் இருந்து இன்றுவரை தமிழ்நாட்டில் திராவிட பாரம்பரிய கட்சிகளான தி. மு. க வும்

திராவிட பாரம்பரிய கட்சியான அ. தி. மு க, வின் தலைமையே ஓர் பிராமண சமூகத்தவரிடம் இருப்பது ஒரு வரலாற்றுப் பிறழ்சியாகும்.

இவ்வாறாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை ஜெயலலிதாவிடம் சென்றதிலிருந்து அக்கட்சி எஞ்சியிருந்த அற்ப சொற்ப திராவிட தன்மையும் இழந்து வருகிறது. இனி இக் கட்சியினால் உண்மையான திராவிட கொள்கைகள் முன்னெடுக்க முடியும் என்பது சந்தேகமே.

திராவிட பாரம்பரிய கட்சியான அ. தி. மு.க.வின் நிலை இவ்வாறிருக்க மற்றைய கட்சியான தி. மு. க, வின் நிலையும் அதுவே. தி. மு. க. தான் ஆட்சியை பிடிப்பதற்கு திராவிட கொள்கைகளை முன்வைக்கும் அதேவேளை தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள அதே திராவிடக் கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைக்கவும் தயங்கவில்லை. இவ்வுண்மையை தி. மு, கவின் கடந்த காலத்தை திரும்பிப் பார்த்தால் விளங்கிக் கொள்ளலாம். இந்த நிலையில தி. மு. கவினாலோ அல்லது அ,தி.மு.கவினாலோ தமிழ்நாட்டுக்கான சுயநிர்ணய உரிமையை நடுவண் அரசிடம் வற்புறுத்துமா?என்பது சந்தேகமே., இந்த நிலையில் இவ்இரு கட்சிகளினதும் தனிநாட்டுக் கோரிக்கை பற்றிய நிலைப்பாட்டை சொல்லவே தேவையில்லை.

தமிழ் நாட்டில் திராவிட பாரம்பரிய கட்சிகளாலேயே கைவிடப்பட்ட திராவிடக் கொள்கைகளும் அதன் எச்சங்களும் திராவிட கழகத்தை தாய் கட்சியாகக் கொள்ளாத

...என்று பதிவுசெய்து கொண்டனர்-

பாட்டாளி மக்கள் கட்சி தனது வன்னிய சமூகத்திற்கு மட்டும் என்ற நிலையை மாற்றி பாட்டாளி மக்களுக்காக உழைக்கும் கட்சியாக தன்னை இனம் காட்ட முற்பட்டுள்ளது இக் கட்சி தமிழ் நாட்டில் வன்னியர் சமூகத்தவர் செறிந்துவாழும் பகுதிகளான தென்னாற்காடு, வட ஆற்காடு திண்டிவனம்போன்ற பகுதிகளில் செல்வாக்குப்பெற்றுள்ளது.

பாட்டாளிமக்கள் கட்சியும் ஆரம்பத்தில் திராவிட கட்சிகள் தெரிவித்தது போலவே தமிழக மக்களின் சுயநிர்ணய கோரிக்கையைப் பின்பற்றுவதாகக் கூறிவருகின்றது. ஆனால் இக் கட்சியும் திராவிட கட்சிகள் போல் ஆட்சிக்குவந்தால்? தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள திராவிட கொள்கைகளுக்கு குழிதோண்டுமா?இல்லையா? என்பதை இனிவரும்காலங்கள் தான் பதில் கூறவேண்டும்

இவை இவ்வாறு இருக்க பாட்டாளி மக்கள் கட்சினர் தம்மீது இந்திய 'தடா' சட்டம் பாய உள்ள நிலையில் தமது தமிழ்நாட்டுசுயநிர்ணய உரிமை கோரிக்கைகளையும் திராவிடக்கொள்கைகளையும் எவ்வாறு தக்கவைக்கப்போகின்றனர் என்பதுதான் கேள்வி

ஆனால் தனித் தமிழ் நாடு என்பதுஇந்தியாவின் மத்தியில் இந்திரா காங்கிரஸ் அரசும் தமிழ் நாட்டில் சந்தர்ப்பவாத அரசியல் நடாத்தும் அ திமு கவோ; தி மு கவோ இருக்கும் வரை சாத்தியப்படுமா என்பது கேள்விக்குறியே

# வட-கிழக்கு இராணுவத்தின் குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும்

## ஹெல உறுமய கோரிக்கை

வடக்கு, கிழக்கு பகுதியில் யுத்த பூமியில் இருக்கும் இராணுவத்தினருக்குள்ள குறைபாடுகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். அவர்களைத் திருப்தி செய்யவேண்டும். அதன் மூலம் தீர்வை துரிதப் படுத்த வேண்டும்என்று நாவல கொஸ்வத்தையில் அண்மையில் நடைபெற்ற ஹெல உறுமய மாநாட்டில் பேசிய திலக் கருணாரட்ணா கூறியுள்ளார்.

ஹெல உறுமய குழுவின் தலைவர் ஜினதாச நியதபால தலைமையில் நடைபெற்ற மேற்படி மாநாட்டில் தொடர்ந்து உரையாற்றிய அவர் நாட்டின் சகல மக்களையும் இணைத்து செயற்பட வேண்டும் என்பதற்காகவே ஹெல உறுமய அமைக்கப்பட்டது எனவும் கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டு நாட்டைப் பாதுகாக்க ஹெலஉறுமய தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்

இங்கு அனுசாசன உரை நிகழ்த்திய தேச பிரேமி அமைப்பின் தலைவர் வண. பேங்கமுவே நாயக கூறுகையில் இந்த நாட்டை அரசு முழுவதும் நிர்வகிக்கவில்லை. சிலபகுதிகளில் தீவிரவாதிகளே ஆட்சி நடாத்துகின்றனர். நீதிமன்றங்களை நடாத்துகின்றனர். அப்பகுதியிலிருந்து எந்த வருமதியும் எமக்கு கிடைக்கவில்லை. இது பற்றி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பேசவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் தேசபிரேமி மற்றும் ஹெலஉறுமய அமைப்பினர் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்டரீதியாக

# பல்கலைக்கழக கல்லூரிகள் விரைவில் அமைக்கப்படும்

பல்கலைக்கழகக் கல்லூரிகளின் கிளைக் கல்லூரிகள் மிகவிரைவில் மாவட்டங்கள் தோறும் நிறுவப்பட உள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முயற்சி எடுத்து வருகிறது.

தற்பொழுது நாட்டில் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் ஒவ்வொரு பல்கலைக் கழகக் கல்லூரி என்ற அடிப்படையில் ஒன்பது கல்லூரிகள் உள்ளன இக் கல்லூரிகள் அமைந்துள்ள மாகாணங்களில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும்மேற்படி கல்லூரிகளது கிளைக் கல்லூரிகள் மிக விரைவில் நிறுவப்பட உள்ளது.

இக் கிளைக் கல்லூரிகள் நிறுவப்பட்டதும் அதிகளவு மாணவர்களுக்கு இக் கல்லூரிகளில் அனுமதிவழங்க முடியும் அத்துடன் மேலதிக பயிற்சி நெறிகளையும் இக் கல்லூரிகளில் ஆரம்பிக்கமுடியும்.

இத் தகவல்களை வடமாகாண பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரியின் பணிப்பாளர் பேராசிரியர் மோகனதாஸ் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் இரண்டாம் வருட வெளிவாரி மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி நேற்று கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது இவ் வைபவத்தில் கலந்து கொண்டு பேசும்போதே மேற்கண்டவாறுஅவர்தெரிவித்தார்

ஈழநாதம்

# மன்னாரில் கடும் வரட்சி; குடிநீரின்றி மக்கள் அவதி

(மன்னார்)

மடுத் திருப்பதியையும் அதனை சூழவுள்ள பகுதியில் நிலவும் கடும்வரட்சி காரணமாக இராணுவ அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு அங்கு தஞ்சம் அடைந்துள்ள சுமார் இரண்டாயிரத்து எண்ணூற்றி முப்பத்தொரு குடும்பங்களை சேர்ந்த சுமார் முப்பத்திரண்டு ஆயிரத்து ஐந்நூறறி முப்பதி எட்டு பேர் நீர் இன்றி அவதிப்படுகின்றனர்.

அங்கு குழாய்க் கிணறுகளை அமைக்க உகந்த மண் படை காணப்படுவதில்லை என தெரிவிக்கப்படுகின்றது. அதே வேளை அங்கு உள்ள கிணறுகளின் நீர் வற்றிக் காணப்படுவதினால் மக்கள் பல மைல் தொலைவில் சென்று நீர் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கு செயற்படும் பொது நல நிறுவனங்களின் மூலம் ஒரு நாளைக்கு ஒரு பவுசர் நீர் மட்டுமே வழங்கப்படக்கூடியதாக உள்ளது மேலதிக நீரைப் பெற்று பவுசர்களில் வழங்க முடியாமைக்கு காரணம் அவ் சுற்றாடல் பவுசருக்கு தேவையான நீரை பெறக்கூடிய வாய்ப்பு இல்லை எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை பாலம்பிட்டி, தச்சனா மடு பகுதியில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் அகதிகளை மீள குடியேற்ற நடைபெறும் இடத்தில் 8 திறந்த கிணறுகளும், 6 குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளது இங்கு சுமார் 558 குடும்பங்கள் உள்ளன

குடிப்பதை தவிர்த்து ஏனைய தேவைகளுக்கான நீரை பண்டிவிரிச்சான், தச்சனா மடு ஆகிய பகுதிகளில் இருந்து பெற்றுக்கொள்ளுகின்றனர். (நி)

## மூடப்பட்டது

கொழும்பு டார்லி வீதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தின் நான்காவது மாடியில் இயங்கி வந்த அரசியற் பிரிவு அலுவலகம் நேற்று முன்தினம் மூடப்பட்டுள்ளது.

இங்கிருந்த முக்கிய ஆவணங்கள் கட்சித் தலைவியின் வீட்டிற்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளது,

# சிரிய எல்லையிலிருந்து இஸ்ரேல் படைகள் வாபஸ்பெற இணக்கம்

(வாஷிங்டன்)

சிரிய எல்லைகளிலிருந்து வெளியே இஸ்ரேல் இணக்கம் தெரிவித்திருப்பதாக அறிய வருகின்றது. அரபு - இஸ்ரேல் சமாதான முயற்சியின் ஏழாவது சுற்றுப் பேச்சுகள் கடந்த புதன்கிழமை ஆரம்பமான போது இத்தகைய இணக்கம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கையொன்றை இஸ்ரேல் சிரியாவிடம் கையளித்ததாகவும். இவ் அறிக்கையில் இஸ்ரேல் தனது நிலைப்பாட்டை தெளிவான முறையில் எடுத்துக்காட்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

1967 ஆம் ஆண்டு மத்திய கிழக்கு யுத்தம் இடம்பெற்ற வேளையில், சிரியாவிடமிருந்து கோலான் குன்றுப் பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியது நான்கு தடவைகள் நீடித்த கசப்பான யுத்தத்திற்கு நிரந்தர முடிவு ஏற்படவேண்டுமெனவும், 45 ஆண்டு கால பகைமை நிலை முற்றாக நீக்க வேண்டுமென வும், இஸ்ரேல் விரும்புகின்றது ஆனால் இஸ்ரேலின் போக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

எனினும் இது மட்டும் போதாது என்பதுவே சிரியாவின் நிலைப்பாடாக உள்ளது தெரிந்ததே. ஆனாலும் இஸ்ரேலின் புதிய அறிக்கை சிரியர்களின் தேவையை திருப்தி செய்துள்ளது என்று சிரியாவின் பிரதான பேச்சாளர் கூறியுள்ளார்,

## யாழ்ப்பாணம் விஜயம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையகத்திலிருந்தும் நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்தும் வந்துள்ள பிரதிநிதிகள் இன்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளைக்கு விஜயம் செய்பவுள்ளனர் இப் பிரதிநிதிகள் இங்கு இரு தினங்கள் தங்கியிருப்பர் என்று அறியவருகிறது

## உருவப்பட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நாயன் மார்க்கட்டு சனசமூக நிலையத்தில் கடந்த வெள்ளியன்று லெப் - கேணல் புலேந்திரன், மாவீரர் முருகன் ஆகியோரது உருவப்படத் திறப்பு விழா நடைபெற்றது

இவ் விழாவில் சிறுவர்க்கான சித்திரக்கலை என்னும் விடயம் பற்றி கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் எஸ் கந்தசாமி அவர்கள் கருத்துரையாற்றினார்.

விடுதலைப் புலிகள் துமுடிந்த சிறிலங்கா படைத் துறைத் தலைமை மாற்றத் தைப்பற்றி ஏன் இந்த மாற்றம்? என்ற தலைப்பிலும் ஒரு மதிப்பீட்டுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது இத்துடன் மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதியாக இருந்து. அண்மையில் நடந்த பூனகரி முகாம் மீதான தாக்குதலில் பங்குகொண்டு வீரச்சாவடைந்த லெப். கேணல் சுபனை நினைவு கூர்ந்து ஒரு கட்டுரையும்வெளிவந்துள்ளது

தமிழீழ மாவட்டத்தில் 12 மண்டபங்களில் 1427 பேரும் வவுனியா மாவட்டத்தில் 6 மண்டபங்களில் 582 பேரும் மன்னார் மாவட்டத்தில் 4 மண்டபங்களில்443மாணவர்களும் தோற்றவுள்ளனர்.

இம் முன்னோடிப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையிலேயே க. பொ. த. உயர்தரவகுப்பிற்கு தமது மாணவர்கள் அனுமதிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# திருக்கோயில் கரையோரம் கடலரிப்பால் பாதிப்பு

(அக்கரைப்பற்று)

திருக்கோயில் பிரதேசத்தில் கரையோரப் பகுதிகளில் கடல் அரிப்பு அதிகரித்துக் கொண்டேவருகிறது என்றும், கடந்த சில தினங்களாக பெரும் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கல்முனை, திருக்கோயில், பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் காலத்திற்கு காலம் ஏற்படும் கடலரிப்பை முழுமையாக தடுப்பதற்கு கரையோரம் முழுவதும் பாறாங்கற்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

கடந்த 15 வருட காலத்திற்குள் இப்பிரதேசத்திலுள்ள கரையோரத்தில் சுமார் அரை கிலோ மீற்றர் தூரத்தை கடல் அரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது

## இன்று மீள்பரீட்சை

(யாழ்ப்பாணம்)


க. பொ. த.(உயர்தர)பரீட்சையின் பௌதிகவியல் II-ம் பகுதிக்கான பரீட்சை இன்று யாழ் குடாநாட்டில் சுமார் 23 பரீட்சை நிலையங்களில் நடைபெறுகின்றது. (பா)

## ஓய்வு பெற்ற

இருப்பினும் 10,000 க்கு மேற்பட்ட பதவிவெற்றிடங்களுக்கு சில நூறு சிங்கள இளைஞர்களே சேர முன்வந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்தகட்டமாக இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களை சேர்த்துக்கொள்ள எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிவுற்றது தப்பி ஓடிய குற்றத்திற்கான தண்டனை விலக்கு அளிக்கப்படும் என அரசு அறிவித்திருந்தும் தப்பியோடியோர் சேவைக்குத் திரும்பவில்லை. இதனைத் தொடர்ந்தே, தற்பொழுது இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்களை மீண்டும்சேர்த்துக்கொள்ளும் முயற்சியில் அரசு ஈடுபட்டதாகச் செய்தி

## 60-ம் நாள் நினைவஞ்சலி



### லெப்டினன்ட் கேணல் ராஜன்

(சோ. சற்குணம் - மாதகல்)

ஓ. ராஜனே எங்கள் மண்ணில் உனது
பெயர் எழுதி வைக்கப்படும்
காற்றுக்கள் தம்பக்கம்
மேகத்தைக் கொண்டு செல்லலாம்.
வானத்தைக் கொண்டு செல்ல
யாருக்கும் முடியாது
வானம் போல் நீ
வாழ்ந்ததால் தானே - உனக்கு
வாழ்விற்காக இங்கே யாசிக்கத் தெரியவில்லை
ஆயினும்
தமிழீழத்தின் தேசத்திற்குரியவன் நீ

இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

## 45-ம் நாள் நினைவலைகள்

தோற்றம்

21 - 11 - 1970

❋ ❋

மறைவு

12 - 09 - 1992



## 5-ம்ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இளையதம்பி சிவராசா**
(அதிபர், நல்லூர் ஞானோதைய வித்தியாலயம்)



திருமதி
**பராசக்தி சிவராசா**
ஓய்வு பெற்ற ஆசிரியை
(யா- சன்மார்க்க வித்தியாலயம்)

19 - 05 - 1987 <மறைவு:> 21 - 10 - 1987

திதி: 25- 10- 1992

உங்களை இழந்த எங்களிற்கு
கண்களில்லை பார்ப்பதற்கு
ஒளியுமில்லை - ஏதோ
உங்கள் ஆத்மாவின்
உயிரோட்டம் என்ற
ஊன்று கோல்களினால்
வாழ்கின்றோம் இப்புவிதனிலே.
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்



## லெப்டினன்ட் கேணல் ராஜன்

(சோ. சற்குணம் - மாதகல்)


ஓ. ராஜனே எங்கள் மண்ணில் உனது
பெயர் எழுதி வைக்கப்படும்
காற்றுக்கள் தம்பக்கம்
மேகத்தைக் கொண்டு செல்லலாம்.
வானத்தைக் கொண்டு செல்ல
யாருக்கும் முடியாது
வானம் போல் நீ
வாழ்ந்ததால் தானே - உனக்கு
வாழ்விற்காக இங்கே யாசிக்கத் தெரியவில்லை
ஆயினும்
தமிழீழத்தின் தேசத்திற்குரியவன் நீ

**இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட
வீரவேங்கைகள் அனைவருக்கும்
எமது வீரவணக்கங்கள்**

**சென். தோமஸ் வி. கழகம்**
மாதகல்

[கி-5313]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பலாலி இராணுவத்துடனான நேரடி
மோதலில் வீரச்சாவடைந்த

**2-ம் லெப்டினன்ட் சீனன்**
[சற்குரு சதீஸ்]

வீரஜனனம் 06. 02. 1976
வீரச்சாவு 19. 10. 1990

திதி: 26. 10. 1990

சதீஸ் வீதி.
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

பெற்றோர், சகோதரர்
(3513)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

ங்கள் கட்சித் தலைவியின் வீட்டிற்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளது.

வடிவிலை ... வேண்டும்.
கடந்த 15 வருட காலத்திற்

## 45-ம் நாள் நினைவலைகள்

தோற்றம்
21 - 11 - 1970

மறைவு
12 - 09 - 1992



செல்வன்
**பொன்னம்பலம் றொபேட் ஞானசிலன்**
[பிரபு]

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி,
தொழில்நுட்பக் கல்லூரி மாணவன்

எமது அருமைச் செல்வமே பிரபு!
எமது குடும்பத்தின் நிலை அறிந்து வெளிநாடு
சென்று பொருளீட்டும் வேளையிலே உனது
அப்பா அகாலமரணமடைந்தாரையா!
அப்பா இல்லாது தாய்க்கு தலைமகனாய்
செல்வமாய் வளர்ந்து, கல்வி, தொழில்நுட்ப -
கல்விகற்று சிறப்படைந்து உற்றாரும் உறவினரும்
போற்ற வாழ்ந்தாயையா, சமூகத் தொண்டு
செய்யவென துணிவுடன் சென்ற போது
மண்பிட்டி சரிந்து அகாலமரணமானீரே!
உனை நம்பி எத்தனையோ உயிர்கள்
காத்திருக்க காலன் உனை கவர்ந்து
சென்றானே ஞானசிலா!

உனது பிரிவால் துயருறும்,
அம்மா, சகோதரர்கள்.

இராச வீதி,
கோப்பாய்.

(3526)


மனம் நிறைந்த
**தீபாவளி வாழ்த்துக்கள்**

புதுரக புடைவைகளுக்கு

**ராக மாலிகா**

இல. 04, நவீனசந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

(கி- 5311)


பெறுகின்றது. (பா)

### ஓய்வு பெற்ற

இருப்பினும் 10,000 க்கு மேற்பட்ட பதவிவெற்றிடங்களுக்கு சில நூறு சிங்கள இளைஞர்களே சேர முன்வந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்தகட்டமாக இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களை சேர்த்துக்கொள்ள எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிவுற்றது. தப்பி ஓடிய குற்றத்திற்கான தண்டனை விலக்கு அளிக்கப்படும் என அரசு அறிவித்திருந்தும் தப்பியோடியோர் சேவைக்குத் திரும்பவில்லை. இதனைத் தொடர்ந்தே, தற்பொழுது இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்களை மீண்டும்சேர்த்துக்கொள்ளும் முயற்சியில் அரசு ஈடுபட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### 28 பொலிஸ்

யாக வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பயிற்சிகள் களுத்துறை பொலிஸ் கல்லூரியில் வழங்கப்படுகிறது

கிழக்கு மாகாண சிங்கள முஸ்லிம் எல்லைக் கிராமங்களை பாதுகாக்கும் புதிய திட்டத்தின் கீழ் இப்பதவி உயர்வுகள் வழங்கப்படுவதாக தெரியவருகிறது.

### கிழக்கிற்கு

யோர் தமது சீருடைகள், ஆவணங்களைக் கையளித்துவிட்டு பதவியிலிருந்து விலகிவிட்டனர் என்று மாத்தளைப் பொலிஸ் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

கிழக்கு மாகாணத்துக்குச் சென்று உயிரை விடுவதைவிட கிராமத்தில் வேளாண்மை அல்லது கூலிவேலை செய்யலாம் என்று இடமாற்ற உத்தரவை ஏற்க மறுத்துப் பதவி விலகிய கிராமசேவையாளர்கள் தெரிவிக்கின்றனர்.




அமரர்
**இளையதம்பி சிவராசா**
(அதிபர், நல்லூர் ஞானோதைய வித்தியாலயம்)
19 - 05 - 1987

திருமதி
**பராசக்தி சிவராசா**
ஓய்வு பெற்ற ஆசிரியை
(யா- சன்மார்க்க வித்தியாலயம்)
<மறைவு:> 21 - 1) - 1987

**திதி: 25- 10- 1992**

உங்களை இழந்த எங்களிற்கு
கண்களில்லை பார்ப்பதற்கு
ஒளியுமில்லை - ஏதோ
உங்கள் ஆத்மாவின்
உயிரோட்டம் என்ற
ஊன்று கோல்களினால்
வாழ்கின்றோம் இப்புவிதனிலே.

ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்

கல்வியங்காடு

அன்பு மக்கள்

[ -3524]

## மரண அறிவித்தல்

**கந்தையா சச்சிதானந்தம்**

கந்தையா சச்சிதானந்தம் (முன்னாள் உரிமையாளர் பரிமுருகன் அரிவு ஆலை கைதடி) கொழும்பில் காலமானார். இவர் கந்தையா அம்மாகுட்டி தம்பதிகளின் புதல்வரும், தருமலிங்கம் நாகம்மா தம்பதிகளின் மருமகனும் ஆவார். இவர் சந்திரமதியின் அன்புக்கணவரும் சிவகுமார் (பிரான்ஸ்), சசிலா, சசிகுமார், சுசிலா, சசிகலா, சசிறேகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஞானம் (பிரான்ஸ்), திருச்செல்வம் (ஜேர்மனி), வசந்தா (நீர்வேலி), ராசாம்பாள் (பிரான்ஸ்), ராசாத்தியம்மா, கௌரி (ஜேர்மனி), அருமைநாயகம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற மகான், இரத்தினம், சாந்த சரோஜினி, கனகம்மா, ராசாப்பு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
வி. சந்திரகுமார்

தச்சன்தோப்பு,
ஸ்ரேசன் றோட்,
கைதடி.

(3527)

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள் 25. 10. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6298

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:-

42-2397, 24-4361, 26-5814, 42-9625, 26-6335, 28-1736, 42-9412, 24-7044, 42-3419, 40-7583, 42-5603, 22-7956, 41-6933, 24-1040, 24-5396, 22-2084, 24-1414, 24-8484, 42-1059, 24-6280, 27-9416, 22-3611, 41-4719, 26-0594, 41-9663, 27-8979, 42-3726, 26-8051, 42-9112, 26-5113, 26-5560-

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-

26-495, 26-6029, 24-336, 27-6692, 26-2108, 41-7109 28-6996, 41-8292, 24-6972, 40-7584, 24-9856, 25-5566